# <u>தூத்துக்குடி மாநகராட்சி</u>
## <u>கூட்டப்பொருள்</u>

2019ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 08 ம் நாள் காலை 11.00 மணியளவில் ஆணையர் மற்றும் தனி அலுவலர் அறையில் வைத்து நடைபெற்ற மாமன்ற கூட்ட நடவடிக்கைகள்.

## <u>பொருள்</u>

| | | |
|---|---|---|
| 08.11.2019 | 1) இம்மாநகராட்சியில் செயல்படுத்தப்படும் பொது நிதி திட்ட பணியில் தூத்துக்குடி மாநகராட்சி கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட சத்திரம் தெரு அறிஞர் அண்ணா மாநகராட்சி திருமண மண்டபத்தில் மராமத்து பணிக்காக ரூ. 22,50,000/– மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டுள்ள பணிக்கு 11.10.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பட்ட இரண்டு ஒப்பந்ததாரர்களின் விலைப்புள்ளி உறை 11.10.2019 அன்று திறக்கப்பட்டது.<br>1) திரு. V. Thangaraj<br>மதிப்பிட்டை விட 0.03% குறைவு (ரூ. 18,20,295.50)<br>2) திரு. R. Thangaraj<br>மதிப்பிட்டை விட 0.01% அதிகம் (ரூ. 18,20,641.80)<br>வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு தொகையினைவிட குறைவான தொகை கொடுத்துள்ள திரு. V. Thangaraj என்பவரின் (மதிப்பீட்டை விட 0.03% குறைவு (ரூ.18,20,295.50) ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக் குறிப்பு</u><br>1) பணியின் அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரியதை மாமன்றம் அங்கீகரிக்கலாம்.<br>2) மதிப்பீட்டை விட 0.03% குறைவாக கொடுத்த திரு. V. Thangaraj ஒப்பந்ததாரர்க்கு வேலை உத்திரவு வழங்கியதை மாமன்றம் அங்கீகரிக்கலாம்.<br><br>E2/2908/2019 | 182) அலுவலகக் குறிப்பு அனுமதிக் கப்பட்டது. |
| | 2)இம்மாநகராட்சி பொதுசுகாதார பிரிவு திடக்கழிவு மேலாண்மை பணிகள் டெங்கு தடுப்பு பணிகள் மற்றும் தூய்மை இந்தியா திட்டப்பணிகளில் பணிபுரிந்து வரும் 18 தூய்மைக் காவலர்களுக்கு 2018–19ம் ஆண்டுக்குரிய மாவட்ட ஆட்சியர் அவர்களால் தெரிவிக்கப்பட்ட தினக்கூலி நாளொன்றுக்கு ரூ. 469/– வீதமும் மற்றும் நான்கு மண்டலங்களிலும் பொது சுகாதார பதிவேடுகள் பராமரித்தல், கணினிமயமாக்கல் மற்றும் அமைச்சு பணிகளில் பணிபுரிந்து வரும் 9 கணினி இயக்குபவர்கள் (Data Entry Operator) ஆகியோர்க்கு 2017–18ல் மாவட்ட ஆட்சியர் அவர்களால் தெரிவிக்கப்பட்ட தினக்கூலி நாளொன்றுக்கு ரூ. 320/– வீதமும் வழங்கப்பட்டு பணிபுரிந்து வருகிறார்கள். மேற்கண்ட 18 தூய்மை காவலர்கள் மற்றும் 9 Data Entry Operator | 183) அலுவலகக்குறிப்பு அனுமதி வழங்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | ஆகியோருக்கு மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணை எண் கே3/11282/2019 நாள் 16.09.2019ல் தெரிவிக்கப்பட்டுள்ளபடி தினக்கூலி நாளொன்றுக்கு ரூ. 481/— வீதம் வழங்கவும் அதனால் ஏற்படும் கூடுதல் செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு :** மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>எச்1/4664/17 | |
| | 3)இம்மாநகராட்சி திடக்கழிவு மேலாண்மை திட்டப் பணிகளில் பயன்படுத்தப்படும் இலகுரக வாகனங்களில் மாநகராட்சி சம்பந்தப்பட்ட அறிவிப்புகள் ஒலி பெருக்கிகள் மூலம் வெளியிடப்பட்டு வருகிறது. மேற்படி மாநகராட்சி அறிவிப்புகளுடன் தனியார் நிறுவனம் சம்பந்தப்பட்ட விளம்பரப்பலகைகள் வைப்பதற்கும், ஒலி பெருக்கியில் விளம்பரங்களை வெளியிடுவதற்கும் மற்றும் மேற்படி விளம்பரம் செய்யும் வகைக்கு வி. ராம்கோபி அன் கோ நிறுவனம் வாங்கிய அதிக விலைப்புள்ளி மாதம் ஒன்றிற்கு கட்டணம் ரூ. 46000/— னை ஏற்று மேற்படி நிறுவனம் வழங்கும் விளம்பரங்களை வெளியிடுவதற்கு அனுமதியும் மற்றும் மேற்படி விளம்பரங்களை ஆறுமாத காலத்திற்கு (01.11.2019 முதல் 30.04.2020 வரை) ஒலிபரப்புவதற்கு அனுமதியும் வழங்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு</u>** ; மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>எச்1/2847/19 | 184) அலுவலகக் குறிப்பு அனுமதி வழங்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | 4)இம்மாநகராட்சிக்கு சொந்தமான அறிஞர் அண்ணா மண்டபம் மூன்றாண்டுக்கு ஒரு முறையிலான குத்தகை ஏல அடிப்படையில் ஏல விதிமுறைகளின்படி அதிகபடியான ஏல தொகை கோரும் ஏலதாரருக்கு குத்தகை உரிமையாணை வழங்கப்பட்டு பொது மக்கள் பயன்பாட்டில் இருந்து வந்தது. மேற்படி ஏல விதிமுறைகளின்படி மேற்படி மண்டபத்தினை ஏலம் விடுவதற்கான கடந்த ஆண்டு நிர்ணயம் செய்யப்பட்ட ஏலத்தொகையினை விட கூடுதலாக ஏலத்தொகை நிர்ணயம் செய்யும் பொருட்டு தற்போதைய சந்தை மதிப்பீட்டில் ஏலத்தொகை நிர்ணயம் செய்ய மாநகராட்சி வருவாய் மற்றும் பொறியியல் பிரிவு அலுவலர்களை கொண்ட குழு அமைத்து உத்திரவிடப்பட்டது.<br>மேற்படி குழுவானது தற்போதைய சந்தை மதிப்பு மற்றும் அருகில் உள்ள திருமண மண்டபங்களின் வாடகை தொகை மற்றும் கடந்த ஆண்டுகளில் நடத்தப்பட்ட நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை ஆகியவற்றினை பரிசீலித்து மேற்படி மண்டபத்தினை குத்தகை அடிப்படையில் ஏலம் விடுவதை காட்டிலும் மாநகராட்சி நிர்வாகமே தொடர்ந்து பராமரிக்கும்பட்சத்தில் மாநகராட்சிக்கு கூடுதல் வருவாய் வரும் என அறிக்கை சமர்ப்பித்துள்ளது. இதனடிப்படையில் மாமன்ற தீர்மானம் எண். 140 நாள் 31.07.2019ன்படி மாமன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. மேற்படி மாமன்றத்தின் ஒப்புதலின் அடிப்படையில் தற்போது மேற்படி திருமண மண்டபம் மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது.<br>எனவே மேற்படி திருமண மண்டபத்திற்கு கீழ்க்கண்ட விபரப்படி வாடகை நிர்ணயம் செய்திட மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>முன் வைப்புத் தொகை – ரூ. 20,000/–<br>1 நாள் வாடகை – ரூ. 40000/– – 24 மணி நேரத்திற்கு<br>முன்வைப்புத் தொகை – ரூ. 10000/–<br>1.2 நாள் வாடகை ரூ.20000/– 12 மணி நேரத்திற்கு<br>துப்புரவுக் கட்டணம் – ரூ. 3,000/–<br><br><u>அலுவலகக் குறிப்பு</u> : ஒப்புதல் வழங்கலாம். | 185) அலுவலகக் குறிப்பு ஒப்புதல் வழங்கப்பட்டது. |
| | 5) தூத்துக்குடி மாநகராட்சிக்கு பாத்தியப்பட்ட சிவன் கோவில் தெருவில் அமைந்துள்ள மாநகராட்சிக்குச் சொந்தமான திருமண மண்டபமானது மூன்றாண்டுக்கு ஒருமுறையிலான குத்தகை ஏல அடிப்படையில் ஏல விதிமுறைகளின்படி அதிகப்படியான ஏல தொகை கோரும் ஏல தாரருக்கு குத்தகை உரிமையாணை வழங்கப்பட்டு பொது மக்கள் பயன்பாட்டிற்கு பயன்பட்டு வந்தது. ஏல விதிமுறைகளின்படி மேற்படி திருமண மண்டபத்தின் உரிமையாணை 2018 – 2020 வரை வழங்கப்பட்டது, மேலும், குத்தகைதாரர் குத்தகை தொகையினை உரிய காலத்திற்குள் செலுத்தாத காரணத்தினால், சிவன் கோவில் தெருவில் அமைந்துள்ள மாநகராட்சிக்குச் சொந்தமான திருமண மண்டபமானது மாநகராட்சி வசம் ஒப்படைப்பு செய்துள்ளார். இதனடிட்பபடையில் தற்போது மாநகராட்சி நிர்வாகத்தால் பராமரிக்கப்பட்டு வருவதால், தற்போது மேற்படி மண்டபத்தின் வாடகையினை நிர்ணயம் செய்ய மாநகராட்சி வருவாய் | 186) அலுவலகக் குறிப்பு ஒப்புதல் வழங்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | அலுவலர்களை கொண்ட குழு அமைத்து உத்திரவிடப்பட்டது.<br>எனவே, மேற்படி குழுவானது மாநகராட்சிக்குட்பட்ட சிவன் கோவில் தெருவில் அமைந்துள்ள மாநகராட்சி திருமண மண்டபத்தினை பராமரிப்பது தொடர்பாக மாநகராட்சி மூலம் கட்டணம் வசூலிப்பதென ஆணையர் (ம) தனி அலுவலர் அவர்களால் தெரிவிக்கப்பட்ட நிலையில், மேற்படி திருமண மண்டபத்தினை அபிவிருத்தி செய்தல் மற்றும் நாள் வாடகை நிர்ணயம் செய்யும் பொருட்டு அமைக்கப்பட்ட வருவாய் பிரிவு அலுவலர்கள் அடங்கிய குழுவினரால், கீழ்க்கண்டவாறு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. தூத்துக்குடி மாநகராட்சிக்கு சொந்தமான சிவன் கோவில் தெருவில் அமைந்துள்ள திருமண மண்டபத்தை மாநகராட்சி மூலம் பராமத்து பணிகள் செய்து பொது மக்கள் பயன்பாட்டிற்கு மாநகராட்சி மூலம் செயல்படுத்தினால், மாநகராட்சிக்கு கூடுதல் வருமானம் வர வாய்ப்புள்ளது. மேலும் தூத்துக்குடி மாநகரப் பகுதியில் சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் பல்வேறு மேம்பாட்டு பணிகள் நடைபெற்று இம்மண்டபத்தினையும் நவீன வசதிகளுடன் மாநகராட்சி மூலம் பராமரித்து வந்தால், பொது மக்களுக்கு பயனுள்ளதாக அமையும். மேற்படி திருமண மண்டபத்திற்கான தற்போது வாடகையினை கீழ்க்கண்டவாறு நிர்ணயம் செய்யலாமென குழுவின் மூலம் பரிந்துரை செய்யப்பட்டது.<br>முன் வைப்புத் தொகை ரூ. 10,000/—<br>ஒரு நாள் வாடகை ரூ. 15,000/—<br>துப்புரவுக் கட்டணம் ரூ. 2,000/—<br>மேற்படி மண்டபத்தில் நடைபெறும் நிகழ்ச்சிகளில் பயன்படுத்தப்படும் மின் அளவீடுகளுக்குத் தகுந்தவாறு மின் கட்டணங்கள் மற்றும் சேதாரங்கள் ஏதும் இருப்பின், திருமண மண்டப வாடகையின் முன் வைப்புத் தொகையில் இருந்து பிடித்தம் செய்வதற்கும் மாமன்றத்தின் மேற்கண்ட விபரப்படி கட்டணங்கள் நிர்ணயம் செய்யவும் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு :** மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.<br>அ16/00029/19 | |
| | **6)** தூத்துக்குடி மாநகராட்சி பகுதியில் தற்பொழுது சீர்மிகு நகர அபிவிருத்தி திட்ட பணிகள் பல்வேறு திட்ட பணிகள் மற்றும் பொது நிதி பணிகள் நடைபெற்று வருகின்றன. மேற்படி திட்ட பணிகளில் கட்டுமான பணிகள் அதிக அளவில் நடைபெற்று வருகின்றன. மேற்படி கட்டுமானங்களுக்கு பயன்படுத்தும் தண்ணீரின் தரம் சரியான அளவில் இல்லாததாலும் கடற்கரை பகுதியில் அமைந்துள்ளதாலும் கட்டுமானங்களில் சேதம் ஏற்படுகின்றது. எனவே மேற்படி கட்டுமானங்களினை பராமரிப்பதற்கு அதிக செலவு ஏற்படுகின்றது. எனவே இதனை தவிர்ப்பது மிகவும் அவசியமானதாகும். எனவே மாநகராட்சி கட்டுமான பணிகளுக்கு தேவையான நீரினை 1000 லிட்டர்களுக்கு ரூ. 100/—வீதம் என்ற விலை விகிதத்தில் கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு ஒப்பந்ததாரருக்கு வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.<br>**1)** மேற்படி நீரினை பணியின் ஒப்பந்தக்காரர்கள் தங்களது சொந்த பொறுப்பில் குடிநீர் வாகனம் மூலம் எடுத்து செல்ல வேண்டும். | **187)**அலுவலகக் குறிப்பு அனுமதிக் கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | **2)**பெறப்படும் குடிநீரினை எந்த பணிக்கென்று பயன்படுத்த தொகை செலுத்தப்பட்டதோ அந்த பணிக்கு மட்டும் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.<br><br>**3)**வேறு பக்கமோ அல்லது மாநகராட்சியால் அனுமதி வழங்கப்படும் எல்லையினை தவிர்த்து வேறு எங்கும் செல்லக்கூடாது.<br><br>மேற்கண்ட நிபந்தனையின்படி மாநகராட்சி ஒப்பந்ததாரர்களுக்கு குடிநீரினை வழங்க மாமன்றத்தில் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு</u> :** மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>இ3/3145/2019 | |
| | 7) இம்மாநகராட்சி எல்லைக்குட்பட்ட மீளவிட்டான் கிராமம், சில்வர்புரம், மீளவிட்டான், தூத்துக்குடி சாலையில் பழைய கதவு எண். 332/1பா. புதிய புல எண் 136.10ல் ''அமரர் நடிகர் திலகம் சிவாஜி கணேசன்'' அவர்களின் மார்பளவு சிலை நிறுவுவதற்கு அனுமதி கோரி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மூலம் அரசுக்கு அனுப்ப கோரப்பட்டுள்ளது.<br>மேற்படி சிலை அமையும் இடம் தனியாருக்கு சொந்தமான இடமாகும். சிலையானது மார்பளவு கொண்டதாகும்.<br>கூடுதல் அரசு செயலர் மற்றும் அரசு செயலர் வருவாய் நிர்வாகம் அவர்களின் சுற்றறிக்கை நாள் 26.3.2019 க.எண். 2AVII(1)/1946/19 ன் படி சிலை முழுக்க வெண்கலத்தால் இருக்க வேண்டும் மற்றும் இச்சிலை மதிப்பீட்டுத் தொகை ரூ. 65,000/— என மனுதார் தெரிவித்துள்ளார். மேற்படி தொகையினை செலுத்திய பின் சிலை நிறுவ பராமரிப்பு தொகை ஏற்றுக் கொள்ளலாம். மேலும் மாவட்ட ஆட்சியரிடமிருந்து மேல் நடவடிக்கை தொடர கடிதம் அனுப்பலாம் என்ற நிபந்தனையின்படி மாமன்றம் அங்கீகரிக்கலாம்.<br><br>**அலுவலகக் குறிப்பு :** மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.3804/2019/எப்1 | 188)அலுவலகக்குறிப்பு அனுமதிக் கப்பட்டது. |
| | 8) இம்மாநகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மற்றும் நீர் மேலாண்மை பணிகளையும் மேற்கொள்ளும் பணிக்கு பயன்படுத்தப்படும் இலகுரக மற்றும் கனரக வாகனங்களை இயக்குவதற்கு மொத்தம் 173 தற்காலிக மற்றும் நிரந்தர வாகன ஓட்டுநர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். மேற்படி பணியாளர்களுக்கு மாநகராட்சி சார்பாக ஓட்டுனர் ஒருவருக்கு இரண்டு எண்ணம் மேலங்கி வழங்குவதற்கு ஆணையர் அவர்களால் தேர்வு செய்யப்பட்ட மேலங்கி மொத்தம் 346 கொள்முதல் செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேற்படி மேலங்கி கொள்முதல் செய்வதற்கு உத்தேச செலவீனம் ரூ. 4,50,000/—ஆகும். எனவே மேற்படி 346 மேலங்கி கொள்முதல் செய்வதற்கு ஆகும் செலவினத்தை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக் குறிப்பு</u> :** மாமன்றம் அனுமதி வழங்கலாம். எச்3/1163/19 | 189) அலுவலகக் குறிப்பு அனுமதி வழங்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | 9) இம்மாநகராட்சியில் செயல்படுத்தப்படும்–பொது நிதி திட்ட பணியில் தூத்துக்குடி மாநகராட்சி Construction of water bed in car workshop at South Cotton road பணிக்காக ரூ. 3,40,000/– மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டுள்ள பணிக்கு 12.07.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பட்ட இரண்டு ஒப்பந்ததாரர்களின் விலைப்புள்ளி உறை 16.07.2019 அன்று திறக்கப்பட்டது.<br>1) திரு.K. முத்துராமன் மதிப்பீட்டை விட 17.43 % அதிகம் (ரூ. 3,45,220.00)<br>2) திரு.C. ரவி மதிப்பீட்டை விட 18.06% அதிகம் (ரூ. 3,47,070.00)<br>இதில் குறைந்த ஒப்பந்ததார் 1.1 மதிப்பீட்டை விட 10.55% அதிகமாக வழங்கப்பட்டுள்ளதன் பேரில் மீண்டும் விலைகுறைப்பு செய்து கொடுக்க கோரப்பட்டதன் அடிப்படையில் ஒப்பந்ததாரர் 26.09.2019ஆம் தேதியன்று விலைகுறைப்பு கடிதம் கொடுத்துள்ளதன் அடிப்படையில் ஒப்புநோக்கு பட்டியல் விகிதம் வருமாறு<br><br>1) திரு. K. முத்துராமன் மதிப்பீட்டை விட 4.79% குறைவாக (ரூ. 3,08,040.00)<br>2) திரு. C. ரவி மதிப்பீட்டை விட 18.06% அதிகம் (ரூ. 3,47,070.00)<br><br>திரு. K. முத்துராமன் என்பவரின் விலை குறைப்பு ஒப்பந்தப்புள்ளியானது மதிப்பீட்டை விட 4.79% (ரூ. 3,08,040.00) அதிகம். பொறியியல் கையேடு பிரிவு 11 விதி எண். 2.72–ல் பணியின் அவசர அவசியம் கருதி மதிப்பீட்டுத் தொகையினை விட கூடுதலாக 5% வரை அனுமதிக்கலாம் என குறிப்பிடப்பட்டுள்ளது. அதனடிப்படையில் மேற்படி ஒப்பந்தப்புள்ளி தொகையானது மதிப்பீட்டுத் தொகையினை விட 4.79% மட்டுமே அதிகமாக குறிப்பிடப்பட்டுள்ளதால் மேற்படி ஒப்பந்தப்புள்ளியை பணியின் அவசர அவசியம் கருதி ஒப்புதல் அளிக்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு**<br>1. பணியின் அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் அங்கீகரிக்கலாம்.<br>2. மதிப்பீட்டை விட 4.79% அதிகமாக கொடுத்த திரு K. முத்துராமன் ஒப்பந்ததாரர்க்கு வேலை உத்திரவு வழங்கியதை மாமன்றம் அங்கீகரிக்கலாம்.<br>File No,E2/1363/2019<br>. | 190) அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2 அங்ககரிக் கப்பட்டது. |
| | 10) தூத்துக்குடி மாநகராட்சியில் முதுநிலை நகரமைப்பு அலுவலர் (செயற் பொறியாளர் திட்டம்) பணியிடம் ஒன்று அனுமதிக்கப்பட்டுள்ளது. இப்பணியிடத்தில் அயற்பணி அடிப்படையில் பணியாற்றி வந்த திரு. செ. மாறன் என்பவர், சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை எண். 21107/2019/TP1 நாள் 12.09.2019ன் படி பல்லவபுரம் நகராட்சிக்கு பணியிட மாறுதல் செய்யப்பட்டதன் காரணமாக | 191) அலுவலகக் குறிப்பு அனுமதிக் கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | பணியிலிருந்து 19.09.2019 அன்று பணியிலிருந்து விடுவிக்கப்பட்டார். இதனால் மேற்படி பணியிடம் தற்போது காலியாக உள்ளது.<br>இந்நிலையில் சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதம் எண். 17513/2019/எப்4 நாள் 05.11.2019ல் மதுரை மாநகராட்சியில் செயற் பொறியாளர் (திட்டம்) ஆக பணிபுரிந்து வரும் திரு.ஐ. ரெங்கநாதன் என்பவர் ஓராண்டிற்கு அயற்பணி அடிப்படையில் தூத்துக்குடி மாநகராட்சியிலுள்ள செயற் பொறியாளர் (திட்டம்) பணியிடத்தில் பணிமாறுதல் செய்வது தொடர்பாக தூத்துக்குடி மாநகராட்சியில் தீர்மானம் நிறைவேற்றி அதன் நகலினை அனுப்பி வைக்க தெரிவிக்கப்பட்டுள்ளது.<br>இம்மாநகராட்சியில் நகரமைப்பு பணிகள் ஸ்மார்ட்சிட்டி திட்டப் பணிகள், இதர திட்டப்பணிகள், மற்றும் பல்வேறு பணிகள் நடைபெற்று வரும் சூழ்நிலையில் மேற்படி பணிகள் தொடர்பான நில ஆக்கிரமிப்ப கட்டிட திட்ட அனுமதி நிலம் தொடர்பான பிரச்சனைகள் ஆகியவற்றிற்கு நிர்வாக ரீதியாக தீர்வு காணும் வகையில் தொடர் கண்காணிப்பு செய்து நடவடிக்கை மேற்கொள்ள செயற் பொறியாளர் (திட்டம்) நிலையில் அலுவலர் இல்லாததால் மேற்படி பணிகளில் தொய்வு ஏற்படுகிறது. இதனால் இம்மாநகராட்சிக்கு செயற் பொறியாளர் (திட்டம்) நிலையில் ஒரு அலுவலர் மிகவும் அவசியம் தேவைப்படுகிறது. எனவே, இதனைக் கருத்தில் கொண்டு தற்போது மதுரை மாநகராட்சியில் செயற் பொறியாளர் (திட்டம்) ஆக பணிபுரிந்து வரும் திரு. I. ரெங்கநாதன் என்பவரை ஓராண்டிற்கு அயற்பணி அடிப்படையில் தூத்துக்குடி மாநகராட்சியில் காலியாக உள்ள செயற்பொறியாளர் (திட்டம்) பணியிடத்தில் பணியமர்த்திட மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:** மாமன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண். 03321/2019/இ2 | |
| | 11) இம்மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள பக்கிள் ஓடையில் அமலைச்செடி புல் மற்றும் கழிவு மண்களால் நிரம்பி உள்ளது. தற்போது வடகிழக்கு பருவ மழையினை முன்னிட்டு மழைநீர் தங்குதடையின்றி செல்வதற்கு பக்கிள் ஓடையினை தூர்வாரி சுத்தம் செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதன்படி இவ்வலுவலக ந.க.எண். எச்3/3764/2018 செயல்முறை ஆணையின்படி அமைக்கப்பட்டுள்ள விலை நிர்ணய குழு மதிப்பீடு செய்து அனுமதிக்கப்பட்டுள்ள பட்டியலில் தெரிவித்துள்ள தொகையின் அடிப்படையில் இயந்திரங்களைக் கொண்டு கால்வாய்கள் தூர்வாறுதல் மற்றும் சுத்தம் செய்யும் பணிக்கு உத்தேசமாக ரூ 15,00,000/— ஆகும். மேற்படி பக்கிள் ஓடை தூர்வாறும் பணிகளுக்கு ஆகும் தொகையினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும். மேலும் அவசர அவசியம் கருதி பிரிவு 15ன் கீழ் தூர்வாரும் பணியினை உடனடியாக மேற்கொள்ளவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு :** மாமன்றம் அனுமதி வழங்கலாம்<br>எச்3/3764/2018 | 192) அலுவலகக் குறிப்பு அனுமதி வழங்கப்பட்டது. |

தூத்துக்குடி மாநகராட்சி
நாள்.08.11.2019

ஆணையர் (ம) தனி அலுவலர்
தூத்துக்குடி மாநகராட்சி